10th March 1965]

திருமதி சி. குழந்தையம்மாள் : எங்களுடைய பகுதியில் பெரும்பாலான விவசாயக் குடும்பங்களில் இருக்கக் கூடிய பெண்களே விவசாயத்தை நல்ல முறையில் கவனித்து வருகிறார்கள். என்றாலும் இன்றைய உலகத்தில் படிப்பதற்கு அதிகமான முக்கியத்துவம் கொடுத்திருக்கும் காரணத்தால் விவசாயக் கல்லூரிகளில் பெண்களைச் சேர்த்துக் கொள்வதில் தனிச் சலுகைகளைச் செய்து கொடுக்க இந்த விவசாயக் கல்லூரியில் இடம் இருக்கிறதா ?

கனம் திரு. பூ. கக்கன் : மாணவிகள் அதிகமாக வரும் பட்சத்தில் இந்த அரசாங்கம் அவர்களுக்கென்று தனி இடம், மற்ற வசதிகளைச் செய்து கொடுக்க முன் வரும்.

திரு. நா. இராசாங்கம் : விவசாயக் கல்லூரியில் சேருவதற்கு குறைந்த பட்சத் தகுதி என்ன ?

கனம் சபாநாயகர் : அதெல்லாம்தான் விதிகளிலே இருக்கின்றதே. இதற்குக் கேள்வி வேண்டியதில்லை.

Veterinary College at Madurai

* 200 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any proposal to start a Veterinary College in Madurai district; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI P. KAKKAN : (*a*) No.

(*b*) Does not arise.

(அ) ஆம்.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. வை. சங்கரன் : மதுரையில் சர்வகலாசாலை ஏற்படுத்தப் போவதால் ப்ரொபஷனல் காலேஜும் இணைப்பாக இருக்க வேண்டுமென்ற முறையில் அங்கு ஒரு வெட்டரினரி காலேஜை ஏற்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஒரு வெட்டரினரி கல்லூரியை மதுரையில் அமைக்கும் உத்தேசம் அரசாங்கத்திற்கு இல்லை. இப்போதுதான் அங்கே ஒரு விவசாயக் கல்லூரியை அமைப்பதற்குத் திட்டமிட்டிருக்கிறது.

தொழில் நிறுவனங்கள் நடத்தக்கூடிய உபயோகிப்போர் கூட்டுறவு சங்கங்கள்.

***201. கேள்வி.—திரு. மு. கருணாநிதி; புலவர் கா. கோவிந்தன் :** } கனம் கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா.

பெரிய தொழில் நிறுவனங்களில் நியாய விலைக்கடைகளையோ அல்லது உபயோகிப்போர் கூட்டுறவு நிறுவனங்களையோ திறக்க வேண்டும் என்று அரசாங்கம் ஏதேனும் உத்திரவு பிறப்பித்திருக்கின்றதா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: தொழில் நிறுவன முதலாளிகளின் ஒத்துழைப்புடன் அந்த நிறுவனத் தொழிலாளர்களுக்காக, பயன் கொள்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைகள் அமைக்கும்படி அரசாங்கம் 1962 டிசம்பரில் ஒரு திட்டத்திற்கு அனுமதி